**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**

# OS. 16/2009

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.03.2026-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.03.2026 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | திரு. மகேந்திரமூர்த்தி | வயது. | 63 |
| தந்தை பெயர். | திரு. வேணுசாமி | | |

சாட்சி சம்மன் சார்வு செய்யப்பட்டு முன்னிலையானார் அவரின் அடையாளம் சரிப்பார்க்கப்பட்டது. தன்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்வதாக சொல்லியதன் அடிப்படையில் நீதியின் நலன் கருதி சாட்சியின் முதன்மை விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் முதன்மை விசாரணை -**

நான் இவ்வழக்கில் 3-ஆம் தரப்பினர் ஆவேன். இவ்வழக்கானது இறந்த கலியமூர்த்தி மற்றும் இறந்த குப்புசாமி ஆகியோருக்கு இடையே நடைபெறுவதை நன்கு அறிவேன். நான் இவ்வழக்கில் வா.சா.2-ஆக சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1 முதல் 3-ஆம் பக்கம் வரை உள்ள கையொப்பங்கள். குப்புசாமி, கலியமூர்த்தி ஆகியோரின் கையொப்பங்கள்தான் சாட்சிகள் கையொப்பம் உள்ள இடத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் சின்னப்பா உடையது, இரண்டாவது சாட்சி கையொப்பத்தை நான் போட்டேன்.

(ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.)

**2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக** ஒத்திவைக்கப்படுகிறது**.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D. Yuvaraj)
District Munsif cum Judicial Magistrete,
Portonovo.